# இயேசு ஊழியங்கள்

105/229, எம்.டி.எச் சாலை, வில்லிவாக்கம், சென்னை – 600 049
போன்: 9003009752
ஈமெயில்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு மகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது அன்பான வாழ்த்துக்கள். இம்மட்டும் உங்களை கண்ணின் மணிபோல காத்த நல்ல தேவனை நன்றியோடு துதியுங்கள். அவருடைய கிருபை காலைதோறும் புதிதாய் இருக்கிறது. தேவன் கிருபையாகக் கொடுத்த குழந்தையைக் கருவில் சுமந்துகொண்டிருக்கும் உங்கள் மீது தேவ கிருபை இரங்குவதாக. தேவ கிருபை உங்களை நிறப்பும்போது அது உங்களுக்கு புதிய பெலனைக் கொடுக்கும் உங்கள் குழந்தை தேவ பெலத்தினால் நிறப்பப்படும்.

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான் (**நேகேமியா 8:10).

மேலே உள்ள வசனத்தின்படி கர்ப்பமாக இருக்கும் எனது அன்பு மகளே, நீங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்று வேதம் அன்பாக சொல்லுகிறது. எதைக்குறித்தும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் அவர்மேல் வைத்துவிடுங்கள் நீங்களோ அவருக்குள் சந்தோஷமாக இருங்கள். அப்பொழுதுதான் உங்கள் குழந்தை தேவ பெலத்தால் நிறைந்து இருக்கும். இப்போதும் நீங்கள் பலவித பெலவீனத்தோடு இருக்கலாம், பெலனுக்காக எத்தனையோ மருந்து மாத்திரைகளை எடுத்துக்கொண்டு இருக்கலாம். இன்றைக்கு அவற்றின் மேலெல்லாம் இருக்கும் நம்பிக்கையை விட்டுவிடுங்கள். கர்த்தர்மேல் உங்கள் நம்பிக்கையை வையுங்கள். அவருக்குள் சந்தோஷமாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதுதான் உண்மையான உங்கள் பெலன்.

இப்போது நான் உங்களுக்காக ஜெபிக்கப்போகிறேன். என்னோடு நீங்களும் இணைந்துகொள்ளுங்கள்.

அன்பின் பரலோகப் பிதாவே, இப்போழுதும் எனது அன்பு மகளை உம்முடைய சமுகத்துக்கு முன்பாக கொண்டுவருகிறேன். மகளை ஆசீர்வதியும், அவர்கள் கருவில் வளர்ந்துகொண்டிருக்கும் கடைசிக் கால தீர்க்கதரிசன குழந்தையை ஆசீர்வதியும். ஆண்டவரே, மகள் மனதில் உள்ள பயங்களை இப்போதே நீக்கிப்போடும். இவர்களையும் இவர்கள் குழந்தையையும் உம்முடைய உன்னத பெலன் நிறப்பட்டும். சுகப்பிரசவத்தைக் கொடுத்து மகளை ஆசீர்வதியும். இயேசு கிறிஸ்துவின் நல்ல நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் பரிசுத்தமுள்ள நல்ல பிதாவே, ஆமென்.

என் அன்பு மகளே, தைரியமாயிருங்கள். கர்த்தர் நிச்சயமாக உங்களையும், உங்கள் குழந்தையையும் பெலப்படுத்தி ஆசீர்வதித்திருக்கிறார். மேலும் ஜெப உதவிக்கு எங்களோடு தொடர்புகொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு: உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3:00 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*